சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 83/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | ஜெபராஜ் |
| தந்தை பெயர் | : | மனுவேல் |
| கிராமம் | : | நாங்குநேரி |
| தாலுக்கா | : | நாங்குநேரி |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 55 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு அதன் படி 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 நாளாகிய இன்று சாட்சியானவர் ராமநாதபுரம் மாவட்ட முதன்மை நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு ராமநாதபுரம் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் இ-சேவை கேந்திரா டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான R.சிங்காரவேலன் அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை சாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டினார்.

இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.)

2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

**1.** நான் தற்பொழுது பரமக்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவாரூர் மாவட்டத்தில், ஆலிவலம் உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 30.10.2016 ம் தேதி ஆலிவலம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்த ரவிச்சந்திரன் என்பவருக்கு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த அ.சா-1 மாதரசன் என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்துள்ளார், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரின் அடிப்படையில் ஆய்வாளர் ரவிச்சந்திரன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 140/2016-ல், இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) of IPC உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2.** மேற்படி வழக்கு பட்டியல் சமூகத்தினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த கண்ணதாசன் என்பவரை புலன் விசாரணை செய்ய வேண்டுமென காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக நடவடிக்கை C.No.89/SJ&HR/TVR/2016, Dated:

30.10.2016-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3.** இதனை தொடர்ந்து மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் கண்ணதாசன் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று அ.சா-1 மாதரசன், அ.சா-2 கவியரசன், அ.சா-3 வளர்மதி, அ.சா-4 சௌந்தரவேணி, அ.சா-6 ராஜேந்திரன், அ.சா-7 நாகராஜன் மற்றும் சாட்சி அறிவழகன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளேன். பின்னர் 30.10.2016 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் அ.சா-5 பாரதிராஜா மற்றும் சாட்சி பக்கிரிசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் ஒன்றும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் உடனிருந்த சாட்சியிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-5** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சம்பவ இடத்தில் இருந்து மேற்படி சாட்சிகள் முன்பு உடைந்த நிலையில் இருந்த பச்சை கலர் உள்ள பீர் பாட்டில் 3 துண்டகளை மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். அந்த மகஜர் **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பீர் பாட்டில் துண்டுகள் **சா.பொ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ-1 யை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**4.** பின்னர் 31.10.2016 தேதி 8.00 மணியளவில் ராயநல்லூர் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்த 4ம் எதிரி கார்த்தி என்பவரை காவல் துணை காண்காணிப்பாளர் திரு.கண்ணதாசன், கைது செய்து என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் 1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் தஞ்சையிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர் என்பது தெரிய வந்தது.

**5.** பின்னர் மேற்படி கண்ணதாசன் பணிமாற்றம் அடைந்து வேறு காவல் நிலையம் சென்றுவிட்டதால் கடந்த 17.04.2017ம் தேதி அன்று திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திருத்துறைப்பூண்டி உட்கோட்ட

காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த என்னை புலன் விசாரணை செய்ய வேண்டுமென காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக நடவடிக்கை C.No.89/SJ&HR/TVR/2016, Dated: 17.04.2017-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**6.** பின்னர் இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் மற்றும் அ.சா-1 மாதரசன் ஆகியோர்களின் சாதிசான்றிதழ் வழங்க கோரி திருத்துறைப்பூண்டி வட்டாச்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அந்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் வட்டாச்சியர் சிவராமன் என்பவரிடமிருந்து 1ம் எதிரி சுதாகர், 2ம் எதிரி ராஜேந்திரன், 3ம் எதிரி சசிக்குமார், ஆகியோர் இந்து அம்பலகாரர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றும், 4ம் எதிரி கார்த்தி மற்றும் 5ம் எதிரி விக்னேஷ் (எ) விக்னேஷ்வரன் ஆகியோர் இந்து அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதற்கான சாதிசான்றிதழை பெற்றுள்ளேன். 1 முதல் 5 எதிரிகளுக்குரிய சாதிசான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ- 10 முதல் 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வட்டாச்சியர் உதயகுமார் என்பவரிடம் இந்த அ.சா-1 மாதரசன் என்பவர் தாழ்த்தப்பட்ட இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவர் என்பதற்கான சாதிசான்றிதழ் பெற்றுள்ளேன். அந்த சாதிசான்றிதழ் **அ.சா.ஆ- 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**7.** காயம் பட்ட அ.சா-1 மாதரசன், அ.சா-2 கவியரசன், அ.சா-3 வளர்மதி, அ.சா-4 சௌந்தரவேணி ஆகியோர்கள் முதலில் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டது தெரிய வந்து அவர்களுக்கு சிகிச்சை அளித்த திருத்துறைப்பூண்டி மருத்துவர்களை விசாரணை செய்து அ.சா-1 முதல் அ.சா-4 வரையானவர்களுக்கு உரிய விபத்து பதிவேட்டினை பெற்றேன். அந்த விபத்து பதிவேடுகள் **அ.சா.ஆ- 16 முதல் 19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அ.சா-1 முதல் அ.சா-4 வரையானவரகள் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டது தெரிந்து அவர்களுக்கு சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் இருந்து மருத்துவர்களை விசாரணை செய்து அ.சா-1 முதல் அ.சா-4 வரையானவர்களுக்கு உரிய காயச்சான்றிதழ்கள்

பெற்றேன். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ-20 முதல் 23** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**8.** இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள ஆய்வாளர் ராஜேந்திரன் என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சட்டப்பிரிவுகளை 147, 148, 294(பி), 324, 506(2), 323 of IPC உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act என மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஒன்று தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ-24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 14.11.2017 அன்று இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்று நீதிமன்றத்தில் கூறியிருந்தால் அது தவறு. சாட்சியங்கள் கூறியுள்ளதை தான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

அ.சா-1 எந்தவிதமான புகாரும் இந்த எதிரிகளுக்கு எதிராக கொடுக்கவில்லை என்றும், நானோ அல்லது எனக்கு முன்பாக இருந்த கண்ணதாசன் என்ற காவல் துணை கண்காணிப்பாளரோ எந்த சாட்சிகளையும் விசாரணை செய்யவில்லை சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொல்லியவாறு எந்த தடைய பொருட்களும் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் ராமநாதபுரம் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் இ-சேவை கேந்திரா டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான R.சிங்காரவேலன் அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.

இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 12.03.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 16:09:08 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் வகுப்பினர் மற்றும்
பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம்,
திருவாரூர்.